**8.1.2020 :**

**அசல் வழக்கு எண். 159/2016**

வா.சா. 2 பாண்டி பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

நான் கடை நடத்தி வருகிறேன். வாதியை 30 வருடங்களாக தெரியும். பிரதிவாதிகளை தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எப்படி எனக்கு தெரியும் என்றால் அதற்கு அருகில் என்னுடைய இடம் இருப்பதால் தெரியும். மேற்படி விபரத்தை எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. மேற்படி விபரத்தை வழக்கறிஞரிடமும் சொல்லவில்லை. தாவா சொத்திற்கு அருகில் எனக்கு பாத்தியமான சொத்து இருப்பதை காண்பிப்பதற்கு ஆவணம் எதுவும தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு பாத்தியமான சொத்து உள்ளது. எனக்கு பாத்தியமான சொத்தின் புல எண்.250/5A. தாவா சொத்திற்கு வடக்கே எனக்கு நிலம் இருப்பதாக தவறாக சொல்கிறேன் என்றும் வாதி வேறு ஒருவர் நிலம் இருப்பதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்த சம்மந்தமாக ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. எந்த வருட ஆவணத்தின் படி வாதிக்கு தாவா சொத்தில் பாத்தியம் உள்ளது என்பது பற்றி எனக்கு தெரியாது. எனது நிரூபண வாக்கமூலத்தில் தாவா சொத்திற்கு வடக்கே கருப்பாயி நிலம் என்று குறிப்பிட்டிருப்பதும், எனது நிலம் என்று குறிப்பிட்டிருப்பதும் சரி. தாவா சொத்திற்கு வாதி பெயரில் ஏற்பட்ட ஆவணங்களை நான் பார்க்கவில்லை. தாவா சொத்து வாதிக்கு பூர்வீக பாத்தியம் என்பதற்கான பட்டா எதுவும் பார்க்கவில்லை என்றால் சரிதான். வீரணன் இறந்த பிறகு அவரது மகனான பொன்னையா தேவர் தாவா சொத்தை அடைந்தார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. வீரணன் இறந்த பிறகு அவரது மக்களான வாதி மற்றும் அவரது சகோதரர்கள் பிரிவினை செய்து கொண்டது

சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். கேட்டு தெரிந்து கொண்டேன். பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் பார்க்கவில்லை. தாவா சொத்தை பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்றும் வாதி எனக்கு நெருங்கிய பழக்கம் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்மந்தமாக பிரதிவாதிகள் பெயரிலான ஆவணங்கள் பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதிகள் தாவா சொத்திற்கு சென்று வருவார்கள் என்றால் சரிதான். வாதிக்கு ஆதரவாக சொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை =இல்லை.